## சுருக்கம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. த. கணேஷ், த/பெ. நா. தண்டபாணி (லேட்), முன்னாள் பதிவறை எழுத்தர் – தொழில் வணிகத் துறை மத்திய அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பணிII(1)) துறை

அரசாணை (டி) எண். 69

நாள் 13.10.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம், புரட்டாசி 27

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 02.03.2016.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018
3. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.1969/இபி1/2006, நாள் 26.11.2019.
4. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் கடித ந.க. எண்.1969/இபி1/2007, நாள் 10.08.2020.
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

---

ஆணை:–

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 01.02.2016 வரை எவ்வித விதி தளர்வுகளும் இல்லாமல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைபடுத்தி சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களே செயல்முறை வெளியிடலாம் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயல்முறை ஆணையின்படி திரு. த. கணேஷ், (த/பெ. நா. தண்டபாணி (லேட்) முன்னாள் பதிவறை எழுத்தர்) என்பவர் தொழில் வணிகத் துறையின் மத்திய அலுவலகத்தில் கருணை

அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் 02.12.2019 அன்று முற்பகல் பணியேற்பு செய்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், தனியரின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் அரசளவில் கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 28(1)–ன்படி, அதனை ஏற்று தொழில் வணிகத் துறையின் மத்திய அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. த. கணேஷ், இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 02.12.2019 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது குறித்த உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.15080/க்யூ1/2020, நாள் 01.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அ.சா.எண்.24854/ஜி1/2020–1, நாள் 06.10.2020 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

டாக்டர். கே. கோபால்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்
திரு. த. கணேஷ்,
இளநிலை உதவியாளர்,
மத்திய அலுவலகம்,
கிண்டி, சென்னை–32. (2 நகல்கள்).
(தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை–32 அவர்கள் வழியாக).
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை–32.
தலைமை கணக்கு அலுவலர், சென்னை–18/35.
தலைமை கணக்கு அலுவலர், சென்னை–18/35. (பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
சுத்த நகல் / இருப்புக் கோப்பு.
(கோப்பு எண்.5248/பணிII(1)/2020)

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

19/10/2020
பிரிவு அலுவலர்